# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.செளந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.34/2017 நாள்.20-12-2017

பெறுநர்

அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

**சாலைப்பணியாளர்கள் பிரச்சனைகளை நேரடியாக அழைத்துப் பேசாமல் காவல்துறை அடக்குமுறையால் ஒடுக்கப் பார்ப்பது பூனை கண்ணை மூடிக்கொண்டு பூலோகம் இருண்டுவிட்டதாக கூறுவதற்கு ஒப்பாகும்.**

**முதல்வர் உடனடியாக சாலைப்பணியாளர் சங்கத் தலைவர்களை அழைத்துப்பேசி அவர்கள் கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்!**

சாலைப்பணியாளர்கள் தங்கள் ஜீவாதார கோரிக்கைகளை நிறைவேற்றிடக் கோரி கடந்த 12 ஆண்டுகளாக போராடி வருகிறார்கள். அரசாங்கங்களும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை கண்டுகொள்ளாமல் புறந்தள்ளி வருகின்றன. 2002ல் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் சாலை பராமரிப்பு பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பது என்ற தமிழக அரசின் முடிவினால் பத்தாயிரம் சாலைப்பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனால் மன உளைச்சலுக்கும் வேலையின்மை நிலைக்கும் ஆளான அவர்களில் சிலர் மனநோயாளியாகினர், 86 சாலைப்பணியாளர்கள் உயிரிழந்தனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் பிற தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் வற்புறுத்தலினாலும் மீண்டும் 41 மாதங்கள் கழித்து வேலைநீக்கம் செய்த அ.தி.மு.க. அரசே மீண்டும் அவர்களை பணியில் அமர்த்திடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 41 மாதங்கள் வேலை இல்லாமல் வாழ்வாதாரங்களை இழந்து கடன் வாங்கி குடும்பத்தை வறுமை நிலையில் நடத்தி வந்த சாலைப் பணியாளர்களின் நிலையை கருத்தில் கொண்டு அவர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக கருதி அவர்களுக்கு 41 மாத ஊதியத்தை வழங்கிட அரசுக்கு பலதரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு அவை இன்றுவரை நிறைவேற்றப்படாமல் உள்ளது. மேலும் அவர்களுக்கு அரசின் நேரடி நிதியிலிருந்து கருவூலம் மூலம் ஊதியம் வழங்கிட வேண்டும், கல்வித்தகுதியுள்ள சாலைப்பணியாளர்களுக்கு காலியாக உள்ள சாலை ஆய்வாளர் நிலை-2 பணியிடங்களில் பதவி உயர்வு வழங்கிட வேண்டும், பணிநீக்க காலத்தில் கூட்டுறவு கடனுக்கான வட்டி, அபராத வட்டியினை தள்ளுபடி செய்திட வேண்டும், சாலை ஆய்வாளர் பதவி உயர்வு 50 சதவீதமாக வழங்கிட வேண்டும், இலவச பஸ் பாஸ், சீருடைப்படி மற்றும் ஆபத்துப்படி போன்றவை வழங்கிட வேண்டும் மற்றும் காலியாக உள்ள 4000 க்கும் மேற்படி சாலைப்பணியாளர் காலியிடங்களை நிரப்பிட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. இவற்றை நிறைவேற்றிடக் கோரி சாலைப்பணியாளர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துவந்த நிலையில் அவர்கள் கோரிக்கைகள் குறித்து அரசு எந்தவித அசைவுமின்றி இருந்ததால் அவர்கள் முதல்வரை நேரில் சந்தித்து முறையிட நேற்று பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சென்னை நோக்கி வந்துள்ளர். முதல்வர் அவர்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பிரச்சனைகள் குறித்து பேசாமல் அவர்களை காவல்துறையினர் மூலம் அங்காங்கே நிறுத்தி கைது செய்தும், வந்தவர்களை திரும்பிப்போக மிரட்டியும் அச்சுறுத்தியும், பல இடங்களில் நிறுத்தி வைத்துள்ளனர்.

நடப்பது மக்கள் நலன் சார்ந்த அரசுதானா? என்ற சந்தேகம் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. சாலைப்பணியாளர்கள் அரசிடம் தங்கள் வாழ்வாதார கோரிக்கைகளை முன் வைப்பதும், முதல்வரே, நெடுஞ்சாலைத்துறையின் பொறுப்பு வகிப்பதால் அதனை நேரில்கேட்டு அவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை பரிசீலிக்க முன்வராமல் அவர்கள் மீது அடக்குமுறை சட்டங்களை அவிழ்த்துவிட்டும் காவலர்களை ஏவிவிட்டும் கொடுங்கோன்மை செய்வதும் சர்வாதிகாரத்தின் உச்சங்கள்.

பொதுவாகவே இந்த அரசாங்கத்தில் கோரிக்கைகளை நிறைவேற்ற முறையிட்டால் வாளாயிருப்பதும், போராட்டத்திற்குள் புகுந்தால் வாளெடுத்து வீசுவதும் அறுவெறுக்கத்தக்க அதிகார வர்க்க அரசியலின் அடிப்படை சித்தாந்தமாக மாறியுள்ளது. தங்கள் நீண்டகால கோரிக்கைகளை நேரில் கூறவருபவர்களை குறைந்தபட்சம் முதல்வர் அவர்களின் தலையீட்டின் பேரில் உயரதிகாரிகளைக் கொண்டாவது பேச முன்வராமல் காவல்துறை கைது, சிறையிலடைப்பு போன்ற அடக்குமுறை அதிகாரத்தை சுழற்றுவதும் நல்ல அரசுக்கு அழகல்ல. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


''காவல்துறை கொண்டு ஏவல் செய்வதை விட்டுவிட்டு ஊழியர்களின் பிரச்னைகளை உண்மையான உள்ள சுத்தியோடு பேசி, உரிய முடிவுகள் எடுப்பதே மக்கள் நலனில் உண்மையான அக்கரை கொண்ட அரசுக்கு அணி சேர்க்கும். அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை, முதலில் செவி கொடுத்துக்கூட கேட்க முன்வராத அரசு, கேட்க மறுக்கும் அரசு பல ஆண்டுகளாக முன்வைக்கப்படும் கோரிக்கைகளில் ஒரு சிலவற்றைக்கூட பரிசீலிக்க மனமிரங்கவில்லை என்றால் அந்த அரசின் வீழ்ச்சிக்கு ஆரம்பப்புள்ளியாக இது போன்ற காவல்துறை நடவடிக்கைகள் அமைந்துவிடக்கூடும் என்பதையும் ஆளும்கட்சி நினைவில் கொள்வது நல்லது.

ஒரு சிறு பொறிதான் காட்டையே அழிக்கும் நெருப்பாகிறது, ஒரு சிறு துளிதான் நாட்டை அழிக்கும் சுனாமியாக மாறுகிறது. அதுபோல் ஒரு சிறு போராட்ட வெறிதான் ஒரு ஆட்சியை புரட்டிப்போடும் வல்லமை படைத்தது என்பதை இந்த அரசாங்கம் இனி புரிந்து கொள்ளும். கோரிக்கையை முதல்வரிடம் கூற வருபவர்களை சந்திக்கப் மறுப்பதால் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று நினைப்பது பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுபோனதாக எண்ணுவதற்கு ஒப்பாகும். பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டியவர்களே பிரச்சனைகளாக மாறினால் தீர்வுக்காணவேண்டிய பிரச்சனை என்பது போராட்டமாகவோ, புரட்சியாகவோ வெடிக்கும் என்பதை ஆள்பவர்கள் உணர்வது நல்லது. எனவே தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக காவல்துறை அடக்குமுறைகளை கைவிட ஆணையிட்டு சாலைபணியாளர் சங்கத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதலவர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது,

(மு.அன்பரசு)
பொதுச் செயலாளர்